# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 344/மா/2023**
**நாள்: 07.12.2023**

திரு. பி. சரவணன்,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–10,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, சைதாப்பேட்டை, காவேரி நகர் (அப்பாவு நகர்), சாஸ்திரி முதல் குறுக்குத் தெரு, எண்.12/14ல் வசிக்கும் திரு. பி. சரவணன் என்பவரின் 2.11.2023 நாளிட்ட மனு 06.11.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 344/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, சைதாப்பேட்டை, காவேரி நகர் (அப்பாவு நகர்), சாஸ்திரி முதல் குறுக்குத் தெரு, எண்.12/14ல் வசிக்கும் திரு. பி. சரவணன் என்பவரின் முறையீட்டு மனுவில்,

"மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான் சமூக ஆர்வலர்" எனது வீடு, அலுவலகத்திலிருந்து சுமார் 1000 மீட்டர் தொலைவில் கதவு எண்.57/1, முத்துரங்கம் சாலை, தி.நகர், சென்னை - 600 017 என்கின்ற முகவரியில் கடந்த ஆண்டு சுமார் 5000 சதுரடியில் 3 தளத்தில் புதிய கட்டிடம் கட்டப்பட்டு ஆதித் ஹால் என்ற திருமண மண்டபம் துவக்கப்பட்டது. இக்கட்டிடத்தின் முன் பகுதியில் சுமார் 15 அடி அகலம், 60 அடி நீளம், 4 அடி உயரத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையை ஆக்கிரமித்து படிகட்டுகள் ரேம்ப்புகள் அமைக்கப்பட்டுள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம். இதுபோல ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டுள்ளதால் பாதசாரிகள் அந்த நடைபாதையை பயன்படுத்த முடியாமல் ஒரு வழி நடு சாலையில் நடந்து செல்வதால் விபத்துக்களும், போக்குவரத்து நெரிசல்களும் ஏற்படுகிறது. மேலும் இந்த ஆக்கிரமிப்பால் சென்னை மாநகராட்சியின் மழைநீர் கால்வாயில்

தண்ணீர் சீராக செல்ல முடியாமல் தேங்கி கொசுக்கள் உருவாகி நோய்கள் பரவுகிறது. நடைபாதையை ஆக்கிரமித்து மேடு அமைக்கப்பட்டுள்ளதால், அவ்வழியாக செல்லும் பொதுமக்கள் மற்றும் மனுதாரராகிய நான் நடந்து செல்லும்போது ஆக்கிரமிப்பில் தடுக்கி நிலைதடுமாறி கீழே விழும் நிலை ஏற்படுகிறது. வரும் காலங்களில் இந்த ஆக்கிரமிப்பால் உயிர் சேதங்கள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளது. மேலும் கதவு எண்.178M/24, 178/A/(W)/24, முத்தூரங்கன் சாலை, தி. நகர், சென்னை – 600 017 என்கிற முகவரியில் ஜெயின் மகளிர் கல்லூரி இயங்கி வருகிறது. இக்கல்லூரி கட்டிடம் முன் பகுதியில் மாநகராட்சி நடைபாதையை ஆக்கிரமித்து சுமார் 15 அடி அகலம் 200 அடி நீளத்தில் இரும்பு வேலி அமைக்கப்பட்டுள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள புகைப்படத்தில் காணலாம். இதனால் நடைபாதையை பொது மக்கள் பயன்படுத்த முடியாமல் நடுச்சாலையில் நடந்து செல்கிறார்கள். எனவே வீடியோ புகைப்பட ஆதாரங்களுடன் போர்கால அடிப்படையில் ஆக்கிரமிப்புகளை அகற்றி நடவடிக்கை எடுத்து பதில் அளிக்க பொதுநலன் கருதி கடந்த 13.10.2023 அன்று சென்னை மாநகராட்சி A.C.(A.E.) முத்துலட்சுமி அவர்களுக்கு ஒப்புகையுடன் புகார்கள் அளிக்கப்பட்டது. சென்னை மாநகராட்சி 1913 எண்ணிற்கும் புகார்கள் தெரிவிக்கப்பட்டது. A.E. திருமதி. முத்துலட்சுமி அவர்களை அலுவலகத்தில் நேரடியாக சந்தித்து ஆக்கிரமிப்பை அகற்றி நடவடிக்கை எடுக்க பலமுறை தெரிவிக்கப்பட்டது. இன்று, நாளை என்று பல வாரங்கள் நடவடிக்கை எடுக்காமல் அலைக்கழித்தார். நான் போன் செய்தாலும் எடுப்பதில்லை. கடைசியாக 1.11.2023 அன்று நான் போன் செய்து கேட்கையில் மாநகராட்சி அதிகாரிகளிடம் முறையாக அனுமதி பெற்றுதான் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். எனவே நடவடிக்கை எடுக்க இயலாது என்று கூறிவிட்டார்கள். எதிர்மனுதாரர்களிடம் கையூட்டு பெற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்காத A.E. முத்துலட்சுமி மீது தகுந்த நடவடிக்கை எடுத்து கனரக வாகனங்கள் அதிகம் செல்ல கூடிய ஒரு வழி சாலையில் மனித உயிர்களுக்கு தீங்கு ஏற்படும் வகையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்திரவிடக் கோரி பொது நலன் கருதி மேல்முறையீடு மனு அளிக்கப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு 16.11.2023 நாளிட்ட இம்முறைமன்ற கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 10 மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. மண்டல அலுவலர் தனது 28.11.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

> மனுதாரரின் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள மண்டபத்தின் சரிவுப்பாதை (Ramp) உடைக்கப்பட்டு மழைநீர் செல்வதற்கு ஏதுவாக இரண்டு டோர்கள் (Manhole Door) போடப்பட்டு நடைபாதை நடந்து செல்லுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் ஜெயின் கல்லூரியின் நடைபாதையில் அமைக்கப்பட்ட தடுப்புகள் (Fencing) அகற்றப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 28.11.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**மனுதாரர் 28.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–10, வார்டு-141, தி. நகர், முத்துரங்கம் சாலை, கதவு எண் 57/1ல் 3 தளத்தில் புதிய திருமண மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடத்தின் முன் பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதை ஆக்கிரமிப்பு செய்து சாய்வு தளம் (Ramp) அமைக்கப்பட்டுள்ளதால், மேற்கண்ட நடைபாதையை பொதுமக்கள் பயன்படுத்த முடியாமல் ரோடில் நடந்து செல்கின்றனர். எனவே, மேற்கண்ட நடைபாதையில் உள்ள சாய்வு தளத்தை அகற்றி மேற்கண்ட நடைபாதையை பொதுமக்கள் முழுமையாக பயன்படுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட முகவரிக்கு அருகே முத்துரங்கம் சாலை கதவு எண் 178M/24–ல் ஜெயின் மகளிர் கல்லூரி இயங்கி வருகிறது. இக்கல்லூரிக்கு முன்புறத்தில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான நடைபாதையை ஆக்கிரமிப்பு செய்து வேலி அமைத்துள்ளது. இதனால் பொதுமக்கள் நடைபாதையை பயன்படுத்தாமல் நடு சாலையில் நடந்து செல்கின்றனர். இது குறித்து மாநகராட்சியில் புகார் மனு அளித்தும், மாநகராட்சி அலுவலர்கள் கல்லூரி நிர்வாகத்தினருக்கு ஆதரவாக இருந்துக்கொண்டு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, மேற்கண்ட இரண்டு இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி பொதுமக்கள் சிரமமின்றி நடமாட வழிவகை செய்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 2.11.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் இளநிலைப் பொறியாளர் 28.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.**

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10, வார்டு 141, தி. நகர், முத்துரங்கம் சாலை, கதவு எண்.57/1ல் 3 தளத்தில் புதிய திருமண மண்டபத்தின் சரிவுப்பாதை (Ramp) அகற்றப்பட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள நடைபாதையை மக்கள் முழுவதும் பயன்படுத்தும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஜெயின் கல்லூரி அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையையொட்டி சில்லரை வியாபாரிகள் தள்ளுவண்டி போன்ற கடைகளை வைப்பதால், கல்லூரியில் படிக்கும் மாணவியர்களுக்கு சிரமம் உள்ளதாக அக்கல்லூரியின் முதல்வர் தெரிவித்து, மேற்கண்ட இடத்தை சில்லரை வியாபாரிகள் பயன்படுத்தாமலிருக்க அக்கல்லூரியையொட்டியுள்ள நடைபாதையில் சில அடி தூரத்திற்கு

வேலி அமைத்து அழகுபடுத்தியுள்ளார். தற்போது மனுதாரரின் புகாரையொட்டி மேற்கண்ட வேலி அகற்றப்பட்டுவிட்டது என்பதை தெரிவித்து அவற்றின் புகைப்பட நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் இளநிலைப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.**

மனுதாரர் தி.நகர், முத்துரங்கம் சாலை கதவு எண். 57/1ல் ஆதித் ஹால் என்ற திருமண மண்டபம் 3 தளத்துடன் கட்டப்பட்டது என்றும், அக்கட்டடத்தின் முன் பகுதியில் சுமார் 15 அடி அகலம் 60 அடி நீளம், 4 அடி உயரத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையை ஆக்கிரமித்து படிகட்டுகள், ரேம்புகள் அமைக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் அச்சாலையில் கதவு எண்.178M/24, 178/A (W)/24 ஜெயின் மகளிர் கல்லூரி இயங்கி வருகிறது என்றும், இக்கல்லூரி கட்டடத்தின் முன்பகுதியில் மாநகராட்சியின் நடைபாதையை சுமார் 15 அடி அகலம், 200 அடி நீளத்தில் இரும்பு வேலி அமைக்கப்பட்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட ஆக்கிரமிப்புகளால் பொதுமக்கள் நடைபாதையை பயன்படுத்தமுடியாமல் உள்ளது என்றும், மழை காலங்களில் மழைநீர் கால்வாயில் தண்ணீர் சீராக செல்லமுடியாமல் நோய்கள் பரவுகிறது என்றும், இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10 அலுவலகத்தில் புகார் மனு அளித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால், தன் மனு மீது உரிய விசாரணை மேற்கொண்டு ஆக்கிரமிப்பை அகற்றிடவும், நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10 அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கையும் எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள மண்டபத்தின் சரிவுப்பாதை (Ramp) உடைக்கப்பட்டு மழைநீர் செல்வதற்கு ஏதுவாக இரண்டு டோர்கள் (manhole door) போடப்பட்டு நடைபாதை நடந்து செல்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் மண்டல அலுவலர் தன்னுடைய அறிக்கையிலும், இளநிலைப்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளனர். மேலும், ஜெயின் கல்லூரி அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையையொட்டி சில்லரை வியாபாரிகள் தள்ளுவண்டி போன்ற கடைகளை வைப்பதால், கல்லூரியில் படிக்கும் மாணவியர்களுக்கு சிரமம் உள்ளதால், அதன் அக்கல்லூரி முதல்வர் மேற்கண்ட சில்லரை வியாபாரிகள் பயன்படுத்தாமலிருக்க நடைபாதையில் சில அடி தூரத்திற்கு வேலி அமைத்து அழகுப்படுத்தியுள்ளார் என்றும், மனுதாரரின் புகாரையொட்டி மேற்கண்ட வேலி அகற்றப்பட்டுவிட்டது என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10ன் இளநிலைப்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் புகார் மனு அளித்தவுடன் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலர்கள் துரிதமாக செயல்பட்டு மேற்கண்ட நடைபாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றியிருந்தால், இவ்வாறான புகார் மனுக்களை தவிர்க்கலாம் என இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. இம்மாதிரியான எளிதில் நடவடிக்கை எடுக்கக்கூடிய புகார் மனுக்கள் மீது உரிய கவனம் செலுத்தாதது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10ன் அலுவலர்கள்

தங்கள் பணியில் அக்கறை காட்டவில்லை என்பதே காரணம் ஆகும். மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10ற்கு புகார் மனு அளித்தவுடன் நடவடிக்கை எடுக்காமல், இம்முறைமன்றத்தில் மனுதாரர் புகார் மனு அளித்த பின்பு, அம்மனு மீது இம்முறைமன்றம் விசாரணைக்கு உத்திரவிட்ட நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்10ன் அலுவலர்கள் நடவடிக்கை எடுத்து இருப்பது மிகவும் கண்டிக்கதக்கது மற்றும் கண்டனத்திற்குரியது ஆகும்.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி குறிப்பாக:-

<u>பிரிவு 7</u> The Ombudsman shall perform all or any of the following functions, namely-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) Pass an order on the proved allegation in the following manner, namely-

(a) xxxx

(b) xxxx

(c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

மற்றும்

<u>பிரிவு: 12</u>(1) The ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely-

(a) x x x x

(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) x x x x

(e) x x x x

அளிக்கப்பட்ட அதிகாரித்தின் அடிப்படையில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலகத்தில் புகார் மனு அளித்தவுடன் நடவடிக்கை எடுக்காமல் இம்முறைமன்றம் மனுதாரரின் மனு மீது விசாரணைக்கு உத்திரவிட்ட பின்பு காலம் தாழ்த்தி, நடவடிக்கை எடுத்து இருப்பதினால் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 10ன் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள மேறகண்ட நடைபாதை ஆக்கிரமிப்பு குறித்து மீண்டும் கள ஆய்வு செய்து ஆக்கிரமிப்பு ஏதும் இருப்பின் அதனை அகற்ற சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மநாகராட்சி மண்டலம் -10ன் உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லா மண்டலங்களிலும், இதுபோல் நடைபாதையில் ஆக்கிரமிப்பு இருப்பின் அதனை அதற்குரிய மண்டல களப் பணியாளர்கள் கண்டறிந்து அகற்றிட மண்டல அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழங்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

இப்பொருள் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை இம்முறைமன்றத்திற்கு 30 நாட்களுக்குள் அனுப்பிவைக்குமாறு மண்டலம் 10-ன் உதவி ஆணையருக்கு ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. ப. சரவணன்,
12/41, சாஸ்திரி முதல் குறுக்குத் தெரு,
காவேரி நகர், (அப்பாவு நகர்)
சைதாப்பேட்டை, சென்னை – 600 015.

2) கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் - 10, பெருநகர சென்னை மாநகராட்சி,
64, என்.எஸ்.கே. சாலை,
கோடம்பாக்கம், சென்னை – 600 024.

4) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல் : மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்